**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>**

**அசல் வழக்கு எண். 206/2020**

**வா.சா.1 – கருணாகரன்**

**<u>06-02-2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் அது உண்மையானவை தான். நான் B.Sc படித்துள்ளேன். பிரதிபாதியின் நிறுவனத்தின் பெயர் என்ன என்றால் விஜயா என்டர்பிரைசஸ். விஜயா என்டர்ப்ரைசஸ் என்ன வகையான தொழில் செய்து வருகிறது என்றால் ஒரு வருடம் இருந்து ஏஜென்சி எடுத்து விஜயா என்டர்பிரைசஸ் ரீடைலராக செயல்படுகிறார். என்னை பிரதிவாதி நிறுவனம் நேரடியாக நியமித்தார்களா என்றால் ஆமாம். நான் வேலைக்கு சேர்ந்த போது ஒப்பந்தம் மற்றும் நிபந்தனைகளை படித்து பார்த்து கையொப்பமிட்டு சேர்ந்தேன் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2. ஒப்பந்தப்படி எனக்கு எவ்வளவு சம்பளம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் மாதம் 40,000/-. நான் எத்தனை நாட்கள் பிரதிவாத நிறுவனத்தில் வேலை செய்தேன் என்றால் 3 மாதங்கள் வேலை செய்தேன். நான் சொல்லும் 40,000/- சம்பளத்தை எனது வழக்குரையிலோ பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் தெரியவில்லை. நான் வேலைக்கு சேர்ந்த தேதி என்ன என்றால் 11.04.2019 ஆகும். என்ன தேதியில் இருந்து நான் வேலையில் இருந்து விடுபட்டேன் என்பதை தாவாவிலோ பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை. எனக்கு இதற்கு முன்பு இந்த வேலையில் 9 வருட காலம் அனுபவம் உள்ளது.

3. எனது பயிற்சி காலம் 3 மாத காலம் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. பயிற்சி காலகட்டத்தில் நான் சரியாக பணிபுரி வில்லை என்றால்

எனது சம்பளத்தை பிடிப்பதாக ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளார்களா என்றால் இல்லை. 15 நாட்களுக்கான சம்பளத்தை கொடுத்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

ஒம்/- திருமதி. A.சுபஸ்ரீ,L.L.M.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.